[1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, இதற்காக $7\frac{1}{4}$ இலட்சம் ரூபாயிலே மதிப்பீடு செய்யப்பட்டு கடந்த 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் தேதி அரசு அதற்கான ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கான பூர்வாங்க வேலைகளைத் தொடருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினையும் ஏற்றுக்கொண்டு கூடிய சீக்கிரத்தில், விரைவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

* வினா எண் 171—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் புதிய 'ஒழுங்கு முறை விற்பனைக் கூடம்' ஏற்படுத்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்கள் அத்தனையும் இத்தகைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்தால் விவசாயிகளுக்கும் தகுந்த வருமானம் வரும். இடைத்தரகர்கள் இல்லாத நிலையும் ஏற்படும். ஆகையால் இனியேனும் அரசு அது பற்றிச் சிந்தித்து குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இதனை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கேள்வி தஞ்சை மாவட்டத்தில் புதிய ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா என்பதுதான். தஞ்சை மாவட்டத்தில் ஏற்கெனவே 24 இடங்களில் விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே மேலும் புதிய விற்பனை கூடம் என்று ஒன்று துவங்குவதாக இல்லை. ஆனால் கீவளூர்

[1979 பிப்ரவரி 24

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் வேலைகளை இன்னும் தீவிரமாக்க ஒரு துணைக்கூடம் நாகப்பட்டினத்தில் அமைப்பது குறித்து பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் ஏறத்தாழ 70 கோடி ரூபாய் அளவிலே புதிதாக ஒரு செயல் திட்டம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதற்காக உலக வங்கியினுடைய உதவியை நாடி இருக்கிறோம். அந்த 70 கோடி ரூபாய் கிடைத்தால் 200-க்கு மேற்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் திறந்து அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தேவையான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுத்தருவதற்குரிய நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலமாக விற்பனை செய்யப்படுகின்ற பொருட்கள் அதாவது லிஸ்ட் ஆப் கமாடிட்டீஸ் எவை எவை என்று அறிவிக்க இயலுமா? அடுத்து புதுக்கோட்டை மாவட்டம் தனி மாவட்டமாக பிரிக்கப் பட்டும் அந்த மாவட்டத்திலே விற்பனைக் கூடங்கள் இல்லை. ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் இருப்பது போல் புதுக் கோட்டை மாவட்டத்திற்கும் ஒரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவ ரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ள விற்பனைக் கூடங்களில் விற்பதற்குரிய விளைபொருள்களாக 8 பொருள்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: 1, நெல், 2. உளுந்து, 3. துவரை, 4. பச்சைப் பயிறு, 5. நிலக்கடலை, 6. தென்னை, 7. முந்திரி, 8. புகையிலை. இந்த 8 விளை பொருட்களும் அங்கே விற்பனைப் பொருட்களாக அறிவிக்கப் பட்டிருக்கின்றன.

அடுத்து புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் புதியதாக ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் நாளைக்கு ஆரம்பிக்கப்பட இருக்கிறது. என்ற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கி றேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பல ஒழுங்கீனங்கள் நடந்திருப்பதாக சொல்லப்படு கிறது. அப்படி ஏதாவது தவறுகள் நடைபெற்றிருந்தால் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய

1979 பிப்ரவரி 24]

விரும்புகிறேன். மேலும் 1975—76-ல் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏதாவது கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி செய்யப்பட்டிருந்தால் அது எவ்வளவு தொகை என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, இதன் தொடர்பாக தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூட்டத்தின் தலைவர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்து தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் விற்பனைக் கட்டணமாக 1974-75லே 9,54,682 ரூபாய் 91 பைசாவும், 1975-76-லே 8,50,720 ரூபாய் 94 பைசாவும், 1976–77-லே 13,60,644 ரூபாய் 85 பைசாவும், வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

குடியாத்தம் நகரிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

* வினா எண் 172—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரில் உள்ள கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடிக்கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவைகளை மீண்டும் திறந்து நடத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) இவ்வாறு அரசிற்கு தகவல் எதுவும் இதுவரை வரவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 9-50]

திரு. வி. கே. கோதண்டாாமன்: அங்கே அறுபது தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன, அவைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே நானும் தகவல்கொடுத்திருக்கிறேன், அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை உரிமையாளர்களும் கொடுத்துள்ளார்கள். அதற்கான காரணம், அந்தத் தொழிற்சாலைகளுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற